ஶ்ரீ:

# மாமுனிகளின் மஹிமை

**(வித்யாபூஷணம் திருநாங்கூர் ப்ரதிவாதி பயங்கர ஶ்ரீ.உ.வே. அண்ணங்கராசார்யர் ஸ்வாமி)**

## 1.அவதரணிகா

ஸம்ஸார நரகஹேதுவாய் ஆஸுர ஸம்பத்தான காமக்ரோதலோபமதமாநாதி தோஷமற்றவராய் ஆசார்யாபிமாந பாத்ர ராய் ஸர்வஜநஹிதைஷிகளாய் பரம புருஷார்த்தம் கைபுகுந்திருக்கும் நம் முன்னோரான மஹாபுருஷர்கள் எந்த ஆசார்யஸார்வபௌமருடைய ஸம்பந்த விஶேஷத்தினால் இவ்வேற்றங்களைப் பெற்று இவ்வுலகினை வாழ்வித்துப் போந்தார்களோ, அந்த ஆசார்யஸார்வ பௌமருடைய வைபவ மஹார்ணவத் தில் ஆத்மலாபத்திற்காக சிறிய ஞானத்தனை அடியேன் சிறிதளவு அவகாஹிக்கத் துணிந்திறங்குகின்றனன். கடல்சூழ்ந்த மன்னுலகம் வாழ அவதரித் தருளிய மணவாளமாமுனிகளே அந்த ஆசார்யஸார்வபௌமராகிறார் என்பதை நாம் விளக்கவும் வேணுமோ?

## 2. திருவவதாரதின வைபவம்

''பாதோ$_2$பா$_4$வம்'' என்கிற ஶ்லோகத்தினால் மாமுனிகளின் திருவவதாரதின வைபவத்தை முன்னோர் வெளியிட்டனர். ஸம்ஸ்க்ருதத்தில் கடபயாதி$_3$க்ரமமொன்றுண்டு. அதின்படி 'பாதோ$_2$பா$_4$வம்' என்பதினால் 4471 என்கிற எண் கிடைக்கிறது. க$_3$தகல்யப்$_3$த$_4$ம் 4471 ஸாதாரண வருஷத்திய துலாசுக்ல சதுர்த்தி குருவாரத்தோடு கூடின திருமூலத்தில் மாமுனிகளின் திருவவதாரம். நக்ஷத்திரத்தின் பேர் மாமுனிகளின் அவதாரத்திற்குக் காரணமானதினால் ஸார்த்தமாயிற்று. வருஷநாமம் மாமுனிகளினவதாரம் எல்லாச் சேதநர்களுக்கும் ஸாதாரணம் – பொதுவானது என்பதைக் குறிப்பிடுகிறது. நக்ஷத்ரநாமம் இது ஸர்வஶ்ரேயஸ்ஸுக்கும் காரணம் என்பதை சுட்டிக்காட்டுகிறது. இந்தத் திருநாளின் வைபவத்தை பிரதிவாதி பயங்கராசார்யரான அண்ணா வரவரமுநிஶதகத்திலே ''யத$_3$வதரண மூலம் முக்திமூலம் ப்ரஜாநாம்'' என்றும், எறும்பியப்பா வரவரமுநி ஶதகத்திலே ''யந்மூலமாஶ்வயுஜமாஸி'' என்னும் ஶ்லோகத்திலும் அருளிச்செய்தார்கள். மேலும் எறும்பியப்பா ''ஆலம்ப$_3$நஸ்ய மம ஸௌம்யவரஸ்ய ஜந்ம மூலம் விபாதி ஸதுலம் விதுலம் ச சித்ரம்'' என்று இத்திருமூலத்தின் பெருமையை விரோதா பாஸாலங்காரத்தினால் வெளியிட்டார். துலாமாஸத்தில் அமைந்தமையால் ஸதுல மான இம்மூலம் இதற்கொப்பான வேறொரு நாளில்லாமையால், விதுலமாகவும் (ஒப்பற்றதாகவும்) விளங்குகிறதாம்.

## 3. அவதார ரஹஸ்யம்

மாமுனிகள் எம்பெருமானாருடைய அபராவதாரமென்பது மாமுனிகள் காலத்தி லேயே ப்ரஸித்தமாயிற்று. ''ஶ்ரீமாந் ஸுந்த$_3$ரஜாமாத்ருமுநி: பர்யாயபா$_4$ஷ்ய க்ருத்'' என்று அண்ணாவும், ''வரவரமுநி: ஶ்ரீமாந் ராமாநுஜோ ஜயது க்ஷிதௌ'' என்று அப்பாவும் அருளிச்செய்தார்கள்.

ஶ்ரீ வைகுண்டநாதனுடைய

திவ்யாஜ்ஞையால் திருவநந்தாழ்வான் இக்கலியுகத்தில் இருநூறு வருஷம் அவதரித்திருந்து உபயவேதாந்த க்ரந்தங்களை ப்ரவர்த்திப்பித்துச் சேதநர்களை வாழ்வித்தருள ஸங்கல்பித்துக்கொண்டு, முதலில் எம்பெருமானாராய் அவதரித்து ப்ரஹ்மஸூத்ர கீதாப்ரஸ்தாநங்களை, ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகளை அருளிச் செய்ததன் மூலமாக ப்ரவர்த்திப்பித்து நூற்றிருபது வருஷங்கள் இவ்விபூதியை அலங்கரித்து, ஸ்ரீவைகுண்டநாதனை ஸேவிக்கவேணும் என்னும் ஆஶாவிஶேஷத்தினால் திருநாட்டுக்குப் போய், மறுபடியும் அருளிச்செயல் ரஹஸ்ய ப்ரஸ்தாநங்களை பஹுமுகமாக ப்ரவர்த்திப்பிக்க பகவந்நியமனத்தினால் மாமுனிகளாக அவதரித்தனன். அவதார ப்ரயோஜநம் தலைக்கட்டின உடனேயே தன்னுடைச் சோதியை சேர்ந்தனன். இதுவாயிற்று மாமுனிகளின் திருவவதார ரஹஸ்யம். மாமுனிகள் ஶேஷாவதார மென்பதை ஶதகத்தில்

''து$_3$க்$_3$தே$_4$ாத$_3$ந்வத்$_3$ த$_4$வளமது$_4$ரம் ஶூத்$_3$த$_4$ஸத்த்வைகரூபம் ரூபம் யஸ்ய ப்ரத$_2$யதிதராம் யம் ப$_2$ணீந்த்$_3$ராவதாரம்'' என்று அண்ணவும், ''நித்யம் பத்யு: பரிசரணதோ வர்ணதோ நிர்மலத்வாத்'' என்கிற ஶ்லோகத்தினால் அப்பாவும் மூதலித்தனர். வேதாந்தவாதாவளீகாரரான மைசூர் அநந்தாழ்வான் ஸ்வாமியும் ''ஶேஷ: ஸ்ரீமாந்நிக$_3$மகுடீயுக்$_3$மரக்ஷா ப்ரவ்ருத்த: ஸ்ரீமத்$_3$ராமாவரஜமுநிதாம் ரம்யஜாமாத்ருதாம் ச। ப்ராப்ய'' என்று திருவநந்தாழ்வானே உபயவேதாந்த ஸம்ரக்ஷணத்திற்காக எம்பெருமானாராயும் மாமுனிகளாயும் அவதரித்ததாக அருளிச் செய்தார். மாமுனிகள் ஶேஷாவதாரமென்பது இன்னும் பல ப்ரமாணங்களாலும் ப்ரத்யக்ஷத்தாலும் ஸித்தித்தபடியால் விப்ரதிபத்திக்கிடமில்லை.

இப்படி எம்பெருமானாருடைய அபராவதாரமாய் ஆதிஶேஷ சரமாவதாரமான மாமுனிகள் திறத்து ஸ்ரீராமாநுஜ ஸம்பந்தமுடையவரனைவர்க்கும் ப்ரதிபத்தி பண்ணவடுக்கும். ப்ரதிபத்தியைப் பண்ணாவிட்டாலும் இவ்விஷயத்தில் அத்வேஷமாவது அவஶ்யம் நடக்கவேணும். அன்னவர்கட்கு நித்யமநுஸந்திப்பதற்காக அடியேனுடைய ஶ்லோகமொன்று இங்கே தரப்படுகிறது.

**''ஸ்ரீஶைலநாத$_2$ார்யக்ருபைகபாத்ரே**
**ரம்யோபயந்த்ராக்$_2$ய கு$_3$ரௌ முநீந்த்$_3$ரே**
**யே ப$_4$க்திஹீநாஸ்து ஜநாஸ்த ஏதே**
**ஸ்ரீஶாப்ரியா: ஸ்யுர் நஹி முக்திரேஷாம்॥''**

### 4.யதிவர வரவரமுநிகளுக்குள்ள ஒற்றுமை

மாமுனிகளுக்கும் எம்பெருமானார்க்குமுள்ள ஒற்றுமை நயத்தை ஶ்லோகங்களால் அடியேன் ஸங்க்ரஹித்துள்ளேன். அவை பின்வருமாறு:—

**''பா$_4$ஷ்யக்ருத்த்வாத$_3$ார்யபீட$_2$**
**ஸ்த$_2$ாபநாந் நித்யவாஸத:।**
**ஸ்ரீரங்கே$_3$, ஸ்ரீரங்க$_3$ஸம்பத்$_3$—**
**வர்த$_4$நாத்$_3$ தே$_3$ஶிகத்வத:॥**
**பத்யு: ஶ்ரிய:, ஶேஷரூபத$_3$ர்ஶகத்வாத்**
**யதித்வத:।**
**ப்ராவண்யாத்$_3$ தி$_3$வ்யதே$_3$ஶேஷு**

**தத்கைங்கர்ய ப்ரவர்த்தநாத்।**
**ரூபஸாம்யாச்ச லக்ஷ்மீஶக்$_2$யாபிதா—**
**துலவைப$_4$வாத்।**
**ஶ்ரீராமாநுஜ ரம்யோபயந்த்ரோ:**
**ஸாம்யம் பரம் மதம்।''**

இவைகளின் விளக்கம் பின்வருமாறு:

1. எம்பெருமானுர் ப்$_3$ரஹ்மமீமாம்ஸாதி$_3$களுக்கும், மாமுனிகள் ஶ்ரீவசநபூஷணுதி$_3$ ஶாஸ்த்ரங்களுக்கும் பாஷ்யமருளிச் செய்தார்.
2. எம்பெருமானுர் எழுபத்துநாலு ஸிம்ஹாஸநத்தையும் மாமுனிகள் அஷ்ட திக்கஜாசார்ய பீடத்தையும் ஸ்தாபித்தார்.
3. பெரியபெருமாளின் நியமனத்தால் இருவரும் கோயிலே நித்யவாஸமாகக் கொண்டிருந்தார்கள்.
4. இருவரும் ஶ்ரீரங்கஶ்ரீயை வளர்த்தனர்.
5. எம்பெருமானுர் திருக்குறுங்குடி நம்பிக்கும், மாமுனிகள் திருவரங்கச் செல்வனுர்க்கும் ஆசார்யரானுர்கள்.
6. ஸஹஸ்ரபணுமண்டல மண்டிதமான நிஜரூபத்தை இருவரும் காட்டியருளினுர்கள்.
7. பகவத்பாகவதாநுவர்த்தந விரோதிகளான ஸம்ஸார பந்தத்தை இருவரும் சடக்கென ஸந்யஸித்தனர்.
8,9, உகந்தருளின நிலங்களில் அதிமாத்ர மான ஈடுபாடும், அங்கங்கே திருவாராதனு திகள் குறையற நடக்கும்படி கட்டளையை ஏற்படுத்தினபடியும் இருவர்க்கும் ஒக்கும்.
10. இருவருடைய திருமேனியும் ஸமாந லக்ஷணங்களோடு கூடினதாய் விளங்கும்.

எம்பெருமானுருடைய வடிவழகை வருணிக்கும் ''காஷாய ஶோபி'' என்கிற ஶ்லோகம் ப்ரஸித்தமானதே. மாமுனிகளின் வடிவழகை வருணிக்கும் ஶ்லோகம் அண்ணு ஶதகத்தில் ஸாதித்தது பின்வருமாறு:—

''ராஜச்சீ$_2$தமயூக$_2$ மண்ட$_3$ல
ஶராஜ் ஜயோத்ஸ்நாஸநாபி$_4$த்$_3$யுதி:
காஷாயாம்ப$_3$ரத$_4$ாரிணீ
கரலஸத்$_3$த$_3$ண்ட$_3$த்ரயீ மண்டி$_3$தா।
ப$_2$ாலாத்யந்த ஸமுல்லஸத்ஸுவிமல
ஸ்நிக்$_3$தே$_4$ார்த்$_4$வ புண்ட்$_3$ரோஜ்ஜ்
தீ$_3$வ்யந்த்யாத்மகு$_3$ணைஸ் ஸத$_3$ா [வலா
வரவராகாராऽஸ்து மே பாவநா।।

11. திவ்யதேஶத்தெம்பெருமான்களால் இருவருடைய வைபவமும் ப்ரகாஶிப்பிக் கப்பட்டது.
12. எம்பெருமானுர் 'ஒரு நாயக'த்தைத் திருநாராயணனுக்கும், மாமுனிகள் 'தீர்ப்பாரையாமினி'யை ராஜகோபாலனுக் கும் ஸமர்ப்பித்தனர். இன்னுமிப்படிப் பலபடி யாலும் ஒற்றுமை நிர்வஹிக்கலாயிருக்கும்.

எம்பெருமானுரில் மாமுனிகளுக்கு நெடுவாசியுண்டு. எம்பெருமானுருக்கு ஸித்தாந்த ஸ்தாபநத்திற்கு உறுப்பாக பரமதங்களை நிரஸிக்கவேண்டிய பணியும் சாலவுண்டு. மாமுனிகளோ பரமத நிரஸனத்தில் ஈடுபடாமல் அருளிச்செயல் ரஹஸ்யாதி வ்யாக்யாந ப்ரவசநாதிகளையே முழுவதும் பொழுதுபோக்காகப் பெற்றிருந்தார். சரம பர்வமான யதீந்த்ர சரணப்ராவண்யமும் அதற்கநுகுணமான நிஷ்டா விஶேஷமும் இவர்க்குத் தன்னேற்றம்.

## 5.தேஶிகோத்தமர்.

ஶ்ருதி எம்பெருமானைக் கண்ணுக் கும் கண்ணுவான் என்னுமாபோலே அப்பா மாமுனிகளை தேஶிகர்களுக்கும்

தேஶிகரென்றூர். ''ஞானமனுட்டான மிவை'' என்கிற பாட்டில் மாமுனிகள் ஸதாசார்ய ஸம்பந்தமுள்ளவனுக்குத் திருமால் தானே வைகுந்தம் தரும் என்றருளிச்செய்தார்.

ஞானமனுட்டானமிவை நன்ருகவே யுடையனுகையாவது– அந்திமோபாய நிஷ்டைக்குறுப்பான ஜ்ஞாந பூர்த்தியையும், அதற்கநுகுண மான அநுஷ்டான ஸம்பத்தையுடைய வனுயிருக்கை. இவையிரண்டும் யதீந்த்ர ப்ரவணரான மாமுனிகளிடத்தே புஷ்கல மாயிருப்பதால் இவரே ஸதாசார்யரில் தலைவராவார். இவருடைய ஸம்பந்தமுள்ள வனுக்கு மோக்ஷம் நிஶ்சிதம் என்பதை ''மன்னுயிர்காளிங்கே'' என்கிற பாசுரத்தி ஞல் முன்னோர் மூதலித்துப் போந்தார்கள்.

மாமுனிகளின் ஆசார்யகுணபூர்த்தி முதலான வைபவங்களைப் பெரியபெருமாள் தாமே இவரிடத்தில் ஶிஷ்யராய் பகவத் விஷயம் கேட்டுகந்து ''ஸ்ரீஶைலேஶ''த் தனியனையுமிட்டருளி வெளிப்படுத்தினுர்.

அவதாரங்களில் கண்ணனுக்கும், ஆழ்வார்களில் கலியனுக்குமுண்டான ஏற்றம்போலே, ஆசார்யர்களில் மாமுனிகளுக்கும் ஏற்றம் விஞ்சியிருக்கும். ஆகையால் மாமுனிகளே தேஶிகோத்தமார்.

## 6. குருபரம்பராபூர்த்தி

பெரியபெருமாள் தொடக்கமாகத் தொடர்ந்துவரும் பொதுவான நம் குருபரம்பரை மாமுனிகளிடத்தில் வந்து பூர்ணமாயிற்று. மாமுனிகள் பர்யந்தமான இந்த குருபரம்பரையை பவிஷ்யத் தர்ஶியான ஸ்ரீநிகமாந்த மஹாகுரு திருவுள்ளம்பற்றியே யதிராஜஸப்ததியில் ''அமுநா தபநாதிஶாயிபூ$_4$ம்நா யதிராஜேந நிப$_3$த்$_3$த$_4$நாயகஸ்ரீ:'' என்கிற ஶ்லோகத்தில் இதை ஒரு முத்துஹாரமாகவும், இதின் நடுநாயகம் எம்பெருமானுரென்றும் நிரூபித்தருளினுர். எம்பெருமானுராகிய நாயகரத்நத்திற்கு முன்னே எட்டாவது முத்துமணி திருமால். பின்னே எட்டாவது முத்துமணி மாமுனிகள். ஆகவே இந்த குருபரம்பராஹாரத்திற்கு யதிராஜர் நடுநாயகமாய் விளங்குகிருர் என்பதைக் குறிப்பாகக்காட்டினபடி. ''யஸ்மிந் பஞ்ச பஞ்ச ஜநா:'' என்கிறவிடத்தில் கொள்ளுகிற ந்யாயத்தினுல் இங்கும் ஸ்ரீ ஸ்ரீதரர்களை திவ்யதம்பதித்வாகாரத்தாலே ஒன்ருக எண்ணி நிர்வஹிக்கலாயிருக்கும். ஸ்ரீஸ்ரீதரர்களைத் தனியாக எண்ணினுலும் ஒரு ஹாநியில்லை. எம்பெருமானுருக்குப் பின் பட்டருடைய ஆசார்யரான ஆழ்வானை யும் கூட்டி குருபரம்பரையை யதிராஜ நாயகமாக நிர்வஹிக்கக்கடவது.

## 7. விஶதவாக்ஶிகாமணி

நம் பூர்வாசார்யர்களில் விஶதவாக் ஶிகாமணி என்னும் விருது மாமுனிகளுக்கே ஏற்பட்டது. ஆழ்ந்த பொருள்களையும் தெளிவாகவும் ஸுக்ரஹமாகவும் ஸரஸமாகவும் அருளிச் செய்யவல்ல ஆற்றலைப் படைத்தவரிவ ரேயாவார். அப்ராமாணிகமாகவோ நிர்மூலமாகவோ அநபேக்ஷிதமாகவோ ஒரு ஸ்ரீஸூக்தியையும் அருளிச்செய்யார். இவரருளிய வ்யாக்யாநங்கள் 'இவை கொண்டோ வ்யாக்யாந லக்ஷண மிட்டது' என்னும்படி ஸகல லக்ஷண யுக்தமாய்

விளங்காநிற்கின்றன. இவருடைய ஸ்ரீஸூக்திகள் ''இனிமையே வடிவு கொண்டதோ' என்னும்படி ரஸகனமாயிருக்கும். மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளின் மாதுர்யாதிகுண வைபவத்தை அண்ணா ஶதகத்தில் பல ஶ்லோகங்களால் அநுபவித்தருளினார். ஒரு ஶ்லோகமே இங்கு தரப்படுகிறது.

**யத்$_3$வாணீம் மது$_4$ராமவாப்ய**
**ஸுதி$_4$யஸ்ஸாகேததாமத்யஜ:**
**மாயாஸங்க$_3$விதூ$_3$ரகா$_3$ஶ்ச ஸததம்**
**ஸந்த்யக்தகாஶ்யாஶ்ரயா:।**
**காஞ்ச்யாதி$_3$ஷ்வபி நிஸ்ஸ்ப்ருஹாஶ்ச**
**ஸததம் ராமாநுஜைகாந்திநோ**
**ராஜந்தே ஸ தநோது ஸுந்த$_3$ரவரோ**
**யோகீ$_3$ஶ்வரோ நஶ்ஶுப$_4$ம்॥''**

இந்த ஶ்லோகம் சிலேடையிலமைந்தது. எந்தமாமுனிகளுடைய மதுரமான ஸ்ரீஸூக்தியாகிற மதுரையைப் பற்றின விவேகிகள் உபாயாந்தரமான புண்ய க்ஷேத்ர வாஸத்திலும் உபேயாந்தரமான க்ருஹாதிகளிலும் ஆசையைவிட்டு ராமாநுஜனிடத்தில் (கண்ணனிடத்திலும் எம்பெருமானாரிடத்திலும்) பக்தியையடைந்து விளங்குகின்றனரோ, அந்த மாமுனிகளே நமக்கு எல்லா நன்மைகளையும் க்ருபை செய்தருள வேணும் என்பது இதின் பொருளாம்.

## 8. எல்லாம் மாமுனிகளே

ஆசார்யக்ருத்யமும், புருஷகார க்ருத்யமும், ஈஶ்வரக்ருத்யமும் எல்லாம் மாமுனிகளினிடத்தில் பூர்ணமாயிருக்கிறது என்று அப்பா ஶதகத்தில்

**ஸித்$_3$தோ$_4$பாயஸ்த்வமஸி ஸுலபோ$_4$**
**லம்ப$_4$யந் பூருஷார்த்தா$_2$ந்**
**அஜ்ஞாதாந் ப்ரத$_2$யஸி புநர் யத் ததோ**
**தேஶிகஸ்த்வம்।**
**தே$_3$வீ லக்ஷ்மீர் ப$_4$வஸி த$_3$யயா**
**வத்ஸலத்வேந ச த்வம்**
**கோஸௌ யஸ்த்வாம் வரவரமுநே**
**மந்யதே நாத்மநீநம்॥''**

என்னும் ஶ்லோகத்தில் அருளிச்செய்தார். ஆகவே ''த்வம் மே ப$_3$ந்து$_4$ஸ்த்வமஸி ஜநக:'' என்கிற ஶ்லோகத்தின்படியே மாமுனிகளையே ஸகலவிதமான ப்ராப்யமும் ப்ராபகமும் என்றத்யவஸித்திருந்தால் மாமுனிகளின் இன்னருளால் நமக்கொரு குறையும் வாராது என்பது திண்ணம். இந்த அத்யவாயத்தையும் மாமுனிகளே நமக்குத் தந்தருளவேணும்.

**''ஸ ப$_4$வது வரயோகீ$_3$ நஸ்**
**ஸமஸ்தார்த்த$_2$ மூலம்''**

**ஜீயர்திருவடிகளே ஶரணம்.**